SRI RAMACHANDRA
INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH
NEWS RELEASE
(Category - I Deemed to be University) Porur, Chennai
Ph.: 044-23860217. www.sriramachandra.edu.in

# *"MEDICINE AND ENGINEERING SHOULD WORK TOGETHER FOR BETTER HEALTHCARE FOR ALL"*
## PROF. KAMAKOTI AT SRIHER CONVOCATION

Chennai, 8th October, 2022.

Engineering and medicine should work in close interaction to develop new medicines, consumables, devices and treatment process to provide affordable healthcare to all people in a democratic manner, said Prof. V. Kamakoti, Director, IIT Madras while delivering the convocation address at Sri Ramachandra Institute of Higher Education and Research here today. Citing the covid experience he said India not only developed two vaccines for the world, administered it to 146 crore people and exported to needy countries but also quickly produced indigenous ventilators to save valuable lives with our engineers working closely with doctors.

There is an urgent need to establish an Indian School of Medicine and treatment process that has international acceptance. We also have to develop indigenous medical devices which are now imported at a huge cost and are priced 50 times more than the cost making them not available for the poor people. If we make our own medical devices we can cut down the import by 30% he added.

Today most of the medical devices are digitised and produce a lot of data which if understood and interpreted can revolutionise health care. India is sitting on a gold mine of such data. Therefore doctors and medical students should take a deep interest in data science. UGC is now permitting students to pursue dual degrees and doctors and medical students should take up diploma or other courses in data science online or offline, he added.

Prof. Kamakoti also appealed to medical students to have a strong interest in research. He pointed out that though Indian systems of medicine like siddha are very effective in individual cases and provide basic immunity instead of merely treating the symptoms they do not have universal acceptance because of lack of scientific validation. He also gave away 45 gold medals to meritorious students. Dr. Shruti N. Iyer got 3 gold medals in MBBS.

The Chancellor Mr.V.R.Venkataachalam conferred the degrees and distributed the certificates. The Pro Chancellor Mr. R.V.Sengutuvan graced the occasion.

In his report the Vice Chancellor Dr. P.V. Vijayaraghavan said three new M.Sc courses in the faculty of Allied Health Sciences in forensic science and cardiovascular science and clinical embryology and four new certificate courses in sports and exercise sciences specialising in the areas of sports related nutrition, physiotherapy, psychology, strength and conditioning were started last year. This year two certificate courses will be started in health professional education. In research inter disciplinary thematic clusters are doing collaborative research with high volume grants from national and international agencies. More than 90 research projects are being undertaken with extra mural support with grants of over Rs.54 crores with women engaged in 75 percent of these projects as principle investigators or co-investigators, he added.

………….

Issued by: T. G. Nallamuthu, Consultant, Media Relations, SRIHER, 9444265578, 9940399346.

# “அனைவருக்கும் சிறந்த சிகிச்சை வழங்க மருத்துவமும் தொழில்நுட்பமும் இணைய வேண்டும்”

## - ஸ்ரீ இராமச்சந்திரா பட்டமளிப்பு விழாவில் பேராசிரியர் காமகோடி பேச்சு

சென்னை, 8 அக்டோபர் 2022

ஜனநாயக முறையில் ஏழைகள் உட்பட அனைத்து மக்களுக்கும் ஏற்கத் தக்க விலையில் சிறந்த சிகிச்சைகளை வழங்க ஏதுவான மருந்துகள், கருவிகள் மற்றும் சிகிச்சை முறைகளை கண்டுபிடிக்க மருத்துவர்களும், பொறியாளர்களும் இணைந்து செயல்பட வேண்டும் என்று ஸ்ரீ இராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் இன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பேசிய சென்னை இந்திய தொழில்நுட்ப கழகத்தின் இயக்குனர் பேராசிரியர் V. காமகோடி கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

சமீபத்திய கோவிட் பெருந்தொற்று தாக்குதலை எதிர்கொண்ட இந்தியா இரண்டு புதிய தடுப்பூசிகளை கண்டுபிடித்து உலகத்திற்கு வழங்கியது மட்டுமல்லாமல், 146 கோடி மக்களுக்கு தடுப்பூசிகளை செலுத்தி பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்துள்ளது. வெண்டிலேட்டர்களின் பற்றாக்குறையை நீக்க பொறியாளர்களும், மருத்துவர்களும் இணைந்து புதிய வெண்டிலேட்டர்களை உருவாக்கி கொடுத்துள்ளனர். தற்போது இந்திய வழி மருத்துவம் மற்றும் சிகிச்சை முறைகளை வகுத்து, அதற்கு பன்னாட்டு ஒப்புதலையும் பெற வேண்டும். மருத்துவ கருவிகளையும், உபகரணங்களையும் உள்நாட்டிலேயே உருவாக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தயாரிக்கப்பட்ட விலையிலிருந்து 50 மடங்கு அதிக விலையில் வெளிநாட்டு மருத்துவ உபகரணங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருவதால் ஏழை மக்களுக்கு இவற்றின் பலன் கிடைப்பதில்லை. நாமே உபகரணங்களை உருவாக்கினால் 30 சதவிகிதம் வரை இறக்குமதியை குறைக்க முடியும். இன்று அனைத்து கருவிகளும், உபகரணங்களும் மின்மயமாக்கப்பட்டுள்ளதால் அவற்றிலிருந்து நமக்கு பெருமளவிலான தகவல்கள் கிடைக்கின்றன. அவற்றை புரிந்து கொண்டு, சிகிச்சை முறைகளை மேம்படுத்தினால் நாம் மருத்துவ சிகிச்சையில் புரட்சியை காண முடியும். இந்தியாவில் இப்படிப்பட்ட மருத்துவ தகவல்களின் தங்க சுரங்கமே உள்ளது. ஆகவே, மருத்துவர்களும், மாணவர்களும் தகவல் அறிவியலின் ஆழ்ந்த ஈடுபாடு கொள்ள வேண்டும். பல்கலை மானிய கழகம் தற்போது மாணவர்கள் இரண்டு படிப்புகளை இணைந்து மேற்கொள்ளலாம் என்று அறிவித்துள்ள நிலையில் மருத்துவ மாணவர்கள் தகவல் அறிவியலில் நேரடியாகவோ, வலைதளம் மூலமாகவோ, பட்டயப்படிப்புகளை மேற்கொள்ள வேண்டும். மருத்துவ மாணவர்கள் ஆய்வுகளிலும் மிகுந்த பற்று கொள்ள வேண்டும். சித்தா போன்ற இந்திய மருத்துவ முறைகள் தனிப்பட்ட நோயாளிகளுக்கு சிறந்த சிகிச்சை அளித்து, அவர்களுக்கு நோய் எதிர்ப்புத் தன்மையை உருவாக்கினாலும் இவை அறிவியல் ரீதியாக உறுதி செய்யப்படாததால் உலக அளவில் ஒப்புதல் பெறவில்லை என்று மேலும் கூறினார். பேராசிரியர் V. காமகோடி சிறப்பாக தேறிய மாணவ, மாணவியர்களுக்கு 45 தங்க பதக்கங்களை வழங்கினார். MBBS மாணவி Dr. ஸ்ருதி N. ஐயர் மூன்று தங்க பதக்கங்களை பெற்றார்.

வேந்தர் திரு. V.R. வெங்கடாசலம் 965 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி முனைவர் மற்றும் சிறப்பு மருத்துவ படிப்பு மாணவர்களுக்கு சான்றிதழ்களை அளித்தார். இணைவேந்தர் திரு. R. V. செங்குட்டுவன் நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

முன்னதாக ஆண்டு அறிக்கையை சமர்ப்பித்த துணைவேந்தர் Dr. P.V. விஜயராகவன், இந்த ஆண்டு துணை மருத்துவ படிப்புகளில், தடய அறிவியல், இதய இரத்த நாள அறிவியல் மற்றும் கருவியல் ஆய்வு துறைகளில் எம்.எஸ்.சி படிப்புகளும் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி அறிவியல் துறையில் ஊட்டச்சத்து, இயன்முறை சிகிச்சை, உளவியல் மற்றும் உடல் உறுதி சார்ந்த நான்கு சான்றிதழ் படிப்புகளும் துவக்கப்பட்டன என்று கூறினார். அடுத்த ஆண்டு, மருத்துவ தொழிற்முறைசார் கல்வித் துறையில் இரண்டு சான்றிதழ் படிப்புகள் துவக்கப்பட உள்ளன. மருத்துவ ஆய்வுகளில் ஸ்ரீ இராமச்சந்திராவில் பல துறைகளை சார்ந்த ஆய்வாளர்கள் இணைந்து ஆய்வுகளை மேற்கொண்டு அதற்காக நாட்டு, பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று வருகிறார்கள். இப்படி திரட்டப்பட்ட ரூ.54 கோடி மானிய உதவியுடன் 90 ஆய்வு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, இதில் 75 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட ஆய்வு திட்டங்களில் மகளிர் முக்கிய ஆய்வாளர்களாகவும் இணை ஆய்வாளர்களாகவும் செயல்படுகிறார்கள் என்று கூறினார்.

---

Issued by Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, 9940399346, 9444265578, mediarelations@sriramachandra.edu.in